

தொலைநோக்கு பார்வையுடன் திட்டங்களை செயல்படுத்துங்கள்

ஸ்டாலின் அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 27– ''தொலைநோக்கு பார்வையுடன் திட்டங்களை செயல்படுத்த வேண்டும்'' என திட்டம் மற்றும் வளர்ச்சி துறையின் ஆய்வுக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று (26–ந் தேதி) தலைமைச்செயலகத்தில், திட்டம் மற்றும் வளர்ச்சி துறையின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில், இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள துறைகளான, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, மாநில வளர்ச்சி கொள்கை குழு, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் முக்கிய திட்டங்களான, சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் மேற்கொள்ளப்படும் வேளாண், பொருளாதார கணக்கெடுப்புகள் குறித்தும், பயிர் காப்பீட்டுத் திட்டத்தில், பயிர் அறுவடைகளின் சராசரி கணக்கெடுப்பு பற்றிய புள்ளிவிவரங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாநிலத்தில் உள்ள அனைத்து ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாழ்வாதாரம் மேம்படவும், விவசாயிகளுக்கு நலன் அளிக்கும் வகையிலும், தொழில் வளர்ச்சி சிறக்கவும், முறையான திட்டங்களை வகுத்து, அவற்றின் செயல்பாட்டினை கண்காணிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

தொலைநோக்கு பார்வையுடன்...

அரசின் நிதி ஒதுக்கீடுகள் அதிகபட்ச மக்களுக்கு சென்றடையும் வகையில் திட்டங்களை தொலைநோக்கு பார்வையுடன்செயல்படுத்தவேண்டும் என்றும், திட்டங்களை வகுக்கையில் பல்வேறு துறை வல்லுநர்களையும், செயற்பாட்டாளர்களையும் கலந்தாலோசித்து அவர்கள் கருத்தினை பெற்று திட்டங்களை இறுதி செய்வது, மேலும் சிறப்பான பயன்களை அளிக்கும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

மாநிலத்திற்கான பிரத்யேகமாக நிகழ்தரவு (Real Time Data) ஒன்றினை நிறுவுமாறும், மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான தொலைநோக்குத் திட்டங்கள் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை வரையறுக்கப்பட்டு ஒவ்வொரு ஐந்தாண்டுகளில் ஆண்டுதோறும் ஏற்படும் நிகழ் மாற்றங்களுக்கேற்ப வடிவமைக்கப்பட வேண்டும் எனவும், முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், தலைமைச்செயலாளர்வெ.இறையன்பு, நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், திட்டம் மற்றும் வளர்ச்சி துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் விக்ரம் கபூர், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் ஆணையர் கருணாகரன், மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர் பாஸ்கரபாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

31ந்தேதிக்கு பிறகு ஓய்வு பெற்ற ஊழியர்களை பணியில் ஈடுபடுத்த தடை: போக்குவரத்துத்துறை உத்தரவு

சென்னை, ஜூலை.27 ஓய்வு பெற்ற ஊழியர்களை வருகிற 31ந்தேதிக்கு பிறகு பணியில் ஈடுபடுத்த தடை விதிக்கப்படுவதாக போக்குவரத்துத்துறை உத்தரவிட்டு உள்ளது.

தமிழக அரசு போக்குவரத்து கழகம் 1972ம் ஆண்டு தொடங்கப்பட்டது. சென்னை மாநகர் போக்குவரத்து கழகம், கோவை, விழுப்புரம், கும்பகோணம், சேலம், மதுரை, திருநெல்வேலி ஆகிய 7 அரசு போக்குவரத்து கழகங்கள் தற்போது உள்ளன. இதில் கும்பகோணம் அரசு போக்குவரத்து கழகம் தான் தென்னிந்தியாவில் பெரியது. இது தவிர மாநில விரைவு போக்குவரத்து கழகம் தனியாக செயல்படுகிறது.

இவற்றில் 1.30 லட்சம் பேர் பணியாற்றுகின்றனர். இந்த நிலையில் போக்குவரத்து கழகங்களில் ஓய்வு பெற்றவர்கள் தினக்கூலி அடிப்படையில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றி வருகின்றனர்.

இந்தநிலையில், சென்னை மாநகர போக்குவரத்து கழக பொதுமேலாளர் (இயக்கம்) எஸ்.செல்வமணி, அனைத்து மண்டல மேலாளர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

மாநகர போக்குவரத்து கழகத்தில் ஓய்வு பெற்ற பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் பாதுகாப்பு பணி, பங்க் நேர காப்பாளர் மற்றும் தலைமையகத்தில் மருத்துவ உதவியாளர் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு இருப்பது தற்போது நடைமுறையில் உள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை தலைவர் உத்தரவின் பேரில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் ஓய்வு பெற்ற பணியாளர்கள் எந்த பணியிலும் பணியமர்த்தக்கூடாது.

இந்தப்பணிகளில் வருகிற 31ந்தேதி வரை மட்டுமே பணிபுரிய அனுமதிக்க வேண்டும். வருகிற ஆகஸ்ட் 1ந்தேதி முதல் இந்தப்பணிகளுக்கு தன்னிச்சையாக ஓய்வு பெற்ற போக்குவரத்து மேலாளர், போக்குவரத்து ஆய்வாளர், பரிசோதகர், ஓட்டுனர் பயிற்சியாளர், கண்டெக்டர், டிரைவர் போன்றோரை பணியமர்த்தி உள்ளது தெரியவந்தால் சம்பந்தப்பட்ட மண்டல மேலாளர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வருகிற 1ந்தேதி முதல் ஓய்வு பெற்ற போக்குவரத்து துறை பணியாளர்கள் எவரையும் தற்காலிக பணிக்கு பணி அமர்த்தவில்லை என்ற அறிக்கையை பொதுமேலாளருக்கு (இயக்கம்) தவறாது அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

என்ஜினீயரிங் கல்லூரிகளில் 75% கட்டணம் வசூலிக்க வேண்டும்: மீறினால் கடும் நடவடிக்கை

அமைச்சர் பொன்முடி உத்தரவு

சென்னை, ஜூலை.27 என்ஜினீயரிங் கல்லூரிகளில் 75 சதவீத கட்டணம் மட்டுமே வசூலிக்க வேண்டும் என்று அமைச்சர் பொன்முடி கூறினார்.

தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் ஜெயலலிதா பல்கலைக்கழகத்தை இணைத்ததில் எந்த தவறும் இல்லை. அண்ணா தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா பல்கலைக்கழகத்தை பெயரளவில் அறிவித்து விட்டு வெறும் 4 பேரை மட்டுமே நியமித்துள்ளனர். எந்த நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. இனி அண்ணாமலை பல்கலை கழகத்துடன் ஒருங்கிணைப்பு பல்கலைக்கழகமாக ஜெயலலிதா பல்கலைக்கழகம் செயல்படும்.

என்ஜினீயரிங் கல்லூரிகளில் 75 சதவீத கட்டணம் மட்டுமே வசூலிக்க வேண்டும். பி.எட். படிப்புக்கும் கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கக்கூடாது. இதுதொடர்பாக உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கூடுதல் கட்டணம் வசூலிக்கும் கல்லூரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசியல் அமைப்பு சட்டப்படி மத்திய அரசு என்பது ஒன்றிய அரசு தான். எனவே, உயர்கல்வித்துறை பாடப்புத்தகங்களிலும் மத்திய அரசு என்பது ஒன்றிய அரசு என்று மாற்றப்படும்.

தமிழகத்தை பொறுத்தமட்டில் எந்த புத்தகமாக இருந்தால் ஒன்றிய அரசு என்று தான் இடம்பெறும். கல்லூரிகளை திறப்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக அனைத்து பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினருடன் கலந்து ஆலோசித்து முதலமைச்சர் உரிய முடிவு எடுப்பார் என்றுகூறினார்.

முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாமின் நினைவு நாளையொட்டி, ராமநாதபுரம் மாவட்டம் பேய்க் கரும்பில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் மாவட்ட கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா மலர் தூவி மரியாதை செலுது்தினார். ராமநாதபுரம் சரக காவல்துறை துணைத் தலைவர் என்.எம்.மயில்வாகனன் உடன் உள்ளார்.

ஜீவன் ரக்ஷாபதக் விருதுகள் பெற விண்ணப்பங்கள் வரவேற்பு: சென்னை கலெக்டர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 27– ஜீவன் ரக்ஷாபதக் விருதுகள் பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என்று சென்னை மாவட்ட கலெக்டர் விஜயா ராணி அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு சமூக நலத்துறையின் சார்பில், 2021–ம் ஆண்டுக்கான ஜீவன் ரக்ஷாபதக் விருதுகள் வெள்ளம், விபத்து, தீ விபத்து, நிலச்சரிவு, மின்கசிவு, வனவிலங்கு தாக்குதல் போன்ற தருணங்களில் மெச்சத்தக்க வகையில் மனிதாபிமானத்துடன் பிறர் உயிரை காப்பாற்றும் செயலில் ஈடுபட்ட நபர்களுக்கு வழங்கபட உள்ளது.

மேற்படி நிகழ்வு அக்டோபர் 1, 2019–க்கு பிறகு நடைபெற்றவையாக இருத்தல் வேண்டும். தகுதியுடைய நபர்கள் தங்கள் சுய விவரம் அடங்கிய கருத்துருவுடன், பிறர் உயிரை காப்பாற்றும் செயலில் ஈடுபட்ட நிகழ்வின் முழு விவரத்துடன் நாளை (28–ந் தேதி) மாலை 5.45 க்குள் மாவட்ட சமூகநல அலுவலகம், சிங்காரவேலர் மாளிகை, எட்டாவது தளம், ராஜாஜி சாலை, சென்னை என்ற முகவரியில் நேரில் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு கலெக்டர் கூறியுள்ளார்.

சென்னை மாநகராட்சி பூங்கா பராமரிப்பு முறைகேடு: ஒப்பந்ததாரர்களுக்கு எச்சரிக்கை

குறைபாடுகள் தொடர்ந்தால் ஒப்பந்தம் ரத்து

சென்னை, ஜூலை.27– சென்னை மாநகராட்சி பூங்காக்களில் பராமரிப்பு பணிகளை சரிவர மேற்கொள்ளாத ஒப்பந்ததாரர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

சென்னைமாநகராட்சி, பூங்காத்துறையின் சார்பில் மாநகரில் சுற்றுச்சூழலை பேணிகாக்கவும், பொதுமக்களின் பொழுதுபோக்கிற்காகவும், 704 பூங்காக்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் 540 பூங்காக்கள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்த அடிப்படையில் தனியாரிடம் பராமரிப்பிலுள்ள பூங்காக்களில் ஒப்பந்ததாரர்கள் கோடைகாலங்களில் 30 நாட்களுக்கு ஒரு முறையும், குளிர்காலம் மற்றும் மழை காலத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறையும் புல்வெளிகளை வெட்டி பராமரிக்க வேண்டும். 7 நாட்களுக்கு ஒருமுறை அல்லது தேவையான நேரத்தில் புல்வெளிகளுக்கிடையேயான களைகளை அகற்ற வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை நடைபாதை மற்றும் செடி, கொடிகளை சரியான அளவில் வெட்டி பராமரிக்க வேண்டும். செடிகளின் வளர்ச்சியை பொறுத்து தேவையான பொழுது வெட்டி பராமரிக்க வேண்டும்.

புல்வெளி அல்லது செடிகள் அடர்த்தியாக உள்ள இடங்களில் வறன்டு அல்லது வளர்ச்சியின்றி இருப்பின் அவ்விடங்களில் புதியதாக செடி கொடிகளை உடனடியாக நட்டு பராமரிக்க வேண்டும். மழை மற்றும் குளிர் காலங்களில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும், கோடைகாலத்தில் நாள்தோறும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இயற்கை உரமும், தென்மேற்கு பருவமழை காலத்தின் போது இருமுறை, வடகிழக்கு பருவ மழையின் போது பூச்சிகொல்லி மருந்துகளை இடவேண்டும்.

குறைபாடுகள் காணப்பட்டால்...

மேலும், ஒப்பந்தத்தில் தெரிவிக்க பட்டுள்ளபடி தகுதியுடைய பணியாளர்கள் தேவையான எண்ணிக்கையில் பணியில் நாள்தோறும் இருக்க வேண்டும். பார்வையாளர்கள் புகார்களை தெரிவிக்க ஒவ்வொரு பூங்காவிலும் புகார் பதிவேடு இருக்க வேண்டும். பூங்காவின் நுழைவு வாயிலில் பார்வை நேரம், பணியாளர்களின் எண்ணிக்கை அடங்கிய விவரங்கள் காட்சிப்படுத்தி இருக்கவேண்டும்.

பூங்காக்களில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தம் செய்துள்ள நிறுவனங்களின் பராமரிப்பு பணிகளில் குறைபாடுகள் காணப்பட்டால் அபராதம் விதிக்கப்படும். பராமரிப்பு பணிகளில் தொடர்ந்து குறைபாடு மற்றும் தொய்வு கண்டறியப்பட்டால் அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

குடியிருப்பு நலசங்கங்கள் தங்கள் பகுதியில் உள்ள பூங்காக்களை கண்காணித்து பூங்காக்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் புகார்கள் குறித்து மண்டல அலுவலகம் அல்லது வட்டார துணை ஆணையாளர் அலுவலகம் அல்லது தலைமையிடத்தில் உள்ள 1913 என்ற தொலைபேசி உதவி எண்ணில் தெரிவிக்கலாம். பொதுமக்களும் தங்கள் பகுதியில் உள்ள பூங்காக்களில் உள்ள குறைபாடுகள் குறித்து தெரிவிக்கலாம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் சென்னை 600087, வளசரவாக்கம், நியூ பெத்தானியா நகர் மெயின் ரோடு, கதவு எண்: 42 ல் வசிக்கும் திரு U.R.புருஷோத்தமன் மனைவி திருமதி P.வெங்கடரத்தினம் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் வட்டம், மதுரவாயல் கிராமம், M.G.சக்கரபாணி நகர், 12 வது தெரு, கதவு எண்: 53D சர்வே எண் 325/2B ல் அடங்கிய மனை எண்: 53 க்கு கூடிய 2400 சதுர அடி மனையில் 1/4 பிரிபடாத பாக மனையும் (600 சதுர அடி) அதிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் முதல் தளத்தில் 720 சதுர அடி (பொது இட உரிமையும் சேர்த்து) Flat No.D ஜ கிரையம் பெற உத்தேசித்துள்ளார். மேற்படி சொத்து தொடர்பு கொண்ட மூலப் பத்திரமான 09.12.1983 தேதியிட்ட விருகம்பாக்கம் சார் பதிவகத்தில் பத்திர எண்: 3447/1983 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரையப்பத்திரம் தொலைந்து விட்டதாக கிரையம் செய்பவர் தெரிவிக்கின்றார்.

மேற்படி தொலைந்துபோன கிரையப்பத்திரமான 09.12.1983 தேதியிட்ட விருகம்பாக்கம் சார் பதிவகத்தில் பத்திர எண்: 3447/1983 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரையப்பத்திரத்தினை வைத்திருப்பவர்கள் அதன் மூலம் என் கட்சிகாரர் கிரையம் பெறும் சொத்தின் மீது ஏதாவது உரிமையோ பாத்தியதையோ பெற்று இருந்தோலோ மற்றும் மேற்படி கிரையத்தில் ஏதேனும் ஆட்சேபனை இருந்தோலோ சட்டபடியான தகுந்த ஆதாரங்களுடன் இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும். தவறும் பட்சத்தில் மேற்படி கிரையத்தில் யாருக்கும் எந்தவித ஆட்சேபனையும் கிடையாது என்று உறுதிப்படுத்தப்பட்டு மேற்படி சொத்தினை என் கட்சிகாரர் கிரையம் பெற்று கொள்வார் என இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பா.கண்ணன்
வழக்கறிஞர்
Nu Tech Sheriff Enclave, No: 146/92, A2, IInd Floor,
Rangarajapuram Main Road, Kodambakkam, Chennai-600 024.

IN THE COURT OF XIX ASST CITY CIVIL JUDGE AT CHENNAI
O.S.No. 1930 / 2019
M/s. Syndicate Bank ...Plaintiff
Vs
V.Kannan ...Defendant
To
V.Kannan, No.13,
Ramakrishna Puram,
5th Street, Mylapore, Chennai–4

Kindly take notice that the plaintiff Bank has filed the above Suit against you for Recovery of Money of a sum of Balance Amount together with subsequent interest and cost on the file of the Hon'bleXIX Asst City Civil Judge At Chennai and the said suit has been posted for your appearance on at 10.30 a.m. Please note that if you fail to appear before the learnedXIX Asst City Civil Judge At Chennai on the above said date and time, the same is liable to be heard and decided in your absence.

A.Ameen
Counsel for Plaintiff

திருத்தம்

மக்கள் குரல் நாளிதழில் 22.7.2021 அன்று 3ஆம் பக்கத்தில் வெளியான எச்ஜி இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவன விளம்பரத்தில் CIN: L13206TN1987PLC015161 என்று தவறுதலாக பிரசுரமாகி உள்ளது. அதனை CIN: L20100TN1987PLC015161 என்று திருத்தி வாசிக்கவும்.

ரமேஷ் குமார் ஹரித்வால்
நிர்வாக இயக்குனர் மற்றும் சிஇஓ
(DIN: 01486666)
இடம் : புதுடெல்லி
தேதி : ஜூலை 27, 2021

வஜ்ரேஷ் கன்சல்டன்ட்ஸ் லிமிடெட்

CIN: U65923TN2007PLC085016
கார்ப்பரேட் அலுவலகம் : 202, யுனைடெட் பிசினஸ் பார்க், வாக்லி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், தானே – 400 605
Email: vimpco123@gmail.com

அறிவிப்பு

(A) வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை (''கூட்டம்'') செயல்படுத்த வஜ்ரேஷ் கன்சல்டன்ட்ஸ் லிமிடெட்டின் உறுப்பினர்களுக்கான 14வது வருடாந்திர பொதுக்கூட்டம் திங்கட்கிழமை, 16 ஆகஸ்ட், 2021 அன்று காலை 11.00 மணிக்கு உத்சவா, புதிய எண்.38, 2வது பிரதான சாலை, ஆர்.ஏ. புரம், சென்னை – 600 028ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கூட்டம் குறித்த அறிவிப்புடன் 2020–21ம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை உறுப்பினர்களுக்கு அவர்கள் பதிவு செய்துள்ள முகவரிக்கு அஞ்சல்/கூரியர் மூலம் பரிந்துரைக்கப்பட்ட முறையில் 26 ஜூலை, 2021 அன்று அனுப்பப்பட்டுள்ளது. தற்போது தொற்று தொடர்வதை கவனத்தில் கொண்டு கம்பெனியின் பதிவுகள் தேவைப்படுவோர், அது குறித்து கம்பெனியின் மின்னஞ்சல் முகவரி vimpco123@gmail.comக்கு எழுத்துப்பூர்வமான கோரிக்கை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டத்தில் நிறைவேற்ற முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் மீது மின்னணு முறையில் (மின்னணு வாக்குப்பதிவு) உறுப்பினர்கள் வாக்களிக்கும் வசதியை கம்பெனி வழங்குகிறது. வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் இருந்து வேறு இடத்தில் இருந்தாலும் (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட்(CDSL)டின் மின்னணு வாக்குப்பதிவு முறையில் உறுப்பினர்கள் வாக்களிக்கலாம். அனைத்து உறுப்பினர்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பதாவது:–

★ வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள சாதாரண அலுவல்களை செயல்படுத்த மின்னணு முறையில் வாக்களிப்பது.

★ தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வெள்ளிக்கிழமை, 13 ஆகஸ்ட், 2021 அன்று அன்று (காலை 9.00 மணி) துவங்கி, ஞாயிற்றுக்கிழமை, 15 ஆகஸ்ட், 2021 அன்று (மாலை 5.00 மணி) முடிவடைகிறது. இந்த காலத்தில் கட் ஆப் தேதியான 9 ஆகஸ்ட், 2021 அன்று காகித வடிவில் அல்லது டீ மெட்டிரியல்ஸ் வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு கோரிக்கை அனுப்பி லாக் இன் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும், மின்னணு வாக்குப்பதிவிற்காக CDSLல் ஏற்கனவே பதிவு செய்துள்ள நபர் தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

★ உறுப்பினர்களின் கவனத்திற்கு:

ஏ) வாக்களிப்பதற்காக மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் தொலைதூர வாக்குப்பதிவு CDSL–ஆல் செயலிழக்கம் செய்யப்படும். ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்துவிட்டால் பின்னர் அதனை மாற்ற உறுப்பினர் அனுமதிக்கப்பட மாட்டார். பி) வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் வாக்குச்சீட்டு மூலமாக வாக்களிக்கும் வசதி உள்ளது. சி) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்குகளை அளித்த உறுப்பினர் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது. மற்றும் டி) கட் ஆப் தேதியான 9 ஆகஸ்ட், 2021 அன்று கம்பெனியினால் பராமரிக்கப்படும் உறுப்பினர் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயரில் உள்ள நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலமும் மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலமும் வாக்களிக்கலாம்.

★ உறுப்பினருக்கு ஏதாவது சந்தேகம் இருப்பின் அது குறித்து உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) பிரிவை அணுகலாம் மற்றும் https://www.evotingindia.comன் உதவிப் பிரிவில் உள்ள உறுப்பினர்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு கையேட்டை பார்வையிடலாம் அல்லது helpdesk no: 1800225533 அல்லது திரு. ராகேஷ் தால்வி, தொலைபேசி எண். 022–23058542 ஆகியவற்றை தொடர்பு கொள்ளலாம். அவர் மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான குறைகளை நீக்குவார்.

(பி) பதிவுத் தேதி

கம்பெனியின் வருடாந்திர பொதுக்கூட்டத்தையொட்டி கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 91 ஒதுக்கீடுகளின் படி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் செவ்வாய்க்கிழமை, 10 ஆகஸ்ட், 2021 முதல் திங்கட்கிழமை 16 ஆகஸ்ட், 2021 வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்

குழு உத்தரவுப்படி
வஜ்ரேஷ் கன்சல்டன்ட்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
விஷால் மாஸ்கே
DIN : 06396704
இயக்குனர்
தேதி: 26 ஜூலை, 2021
இடம்: சென்னை

நியோஜின் பின்டெக் லிமிடெட்

(L65910TN1988PLC131102)
பதிவு அலுவலகம் :
MIG 944, தரை தளம், டி.என்.எச்.பி காலனி, 1வது மெயின் ரோடு,வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு 600 042
கார்ப்பரேட் அலுவலகம் :
நீல்கந்த் கார்ப்பரேட் ஐடி பார்க், 311/312, 3வது மாடி, கிரோல் சாலை, வித்யாவிகார் (மே), மும்பை 400 086.
Email : info@niyogin.in
Website : www.niyogin.com

அறிவிப்பு

SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 விதி 47 மற்றும் விதி 33ன் படி, ஜூன் 30, 2021ல் முடிந்த (தனியானது மற்றும் ஒருங்கிணைந்தது) முதல் காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை விவாதித்து, அங்கீகரித்து பதிவு செய்ய நியோஜின் பின்டெக் லிமிடெட்டின் இயக்குனர்கள் குழு கூட்டம் ஆகஸ்ட் 5, 2021 வியாழக்கிழமை அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இது குறித்து ஸ்டாக் எக்சேஞ்சிற்கு வழங்கப்பட்டுள்ள அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.niyogin.com மற்றும் பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளம் (www.bseindia.com)ல் கிடைக்கும். இந்த விவரங்களை உறுப்பினர்கள் பார்த்துக் கொள்ளலாம்.

நியோஜின் பின்டெக் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
நேஹா அகர்வால்
கம்பெனி செயலாளர் & ஒப்புதல் அதிகாரி
ACS 41425
தேதி: ஜூலை 26, 2021
இடம் : மும்பை

SHRIRAM TRANSPORT FINANCE CO LTD

KUNDRATHUR BRANCH — VECHILE FOR SALE

S.NO.	VEH.NO	MAKE	MODEL	YEAR OF MODEL
1.	TN85 9727	SWARAJ	SWARAJ MAZDA ISUZU S7 SCHOOL BUS-P	2014

CONTACT NO = 9566734823 & 9962680490

SRI SARVARAYA SUGARS LIMITED

REGD OFFICE : 12, ETHIRAJ SALAI, CHENNAI – 600 008
NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES

Notice is hereby given that the following Share Certificates issued by the Company are stated to have been lost/misplaced (with or without transfer deeds) and the registered/bonafide holders thereof has applied to the Company for the issue of Duplicate Share Certificates.

FOLIO NO.	NAME OF THE SHARE HOLDER	CERT_NO	FR_DIST NO	TO_DIST NO	SHARES
010049	BALUSU RAMA RAO	3011 - 3012	437150	437209	60

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificates . Any person who has any claim in respect of the said Share Certificates should lodge such claim with the Company at its registered office at the address given above within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the Company will proceed to issue Duplicate Share Certificates in favour of the registered holder.

Place : CHENNAI
Date : 27/07/2021

S. B. RAJARAJESWARAMMA
Managing Director

ESSAR

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்

CIN No.: L65990TN2005PLC071791
பதிவு அலுவலகம்: 56, புதிய எண். 77, C.P. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை–600 018, தமிழ்நாடு, இந்தியா. Tel.: +91-44-2499 5340
Email: eslinvestors@essar.com | Website: www.essar.com

16வது வருடாந்திர பொதுக்கூட்டம், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தகவல் மற்றும் புத்தகம் மூடல் பற்றிய அறிவிப்பு

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட் (CIN No.: L65990TN2005PLC071791) உறுப்பினர்களுக்கான 16வது வருடாந்திர பொதுக்கூட்டம் ("AGM") திங்கட்கிழமை, 16 ஆகஸ்ட், 2021 அன்று நண்பகல் 12.00 மணிக்கு உத்சவா, புதிய எண்.38, 2வது பிரதான சாலை, ஆர்.ஏ. புரம், சென்னை – 600 028ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வருடாந்திர பொதுக்கூட்டத்தையொட்டி கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 91 ஒதுக்கீடுகளின் படி மற்றும் செக்யூரிட்டீஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, (பட்டியல் கட்டுப்பாடுகள்) கட்டுப்பாடு 42–ன்படி உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் செவ்வாய்க்கிழமை, 10 ஆகஸ்ட், 2021 முதல் திங்கட்கிழமை 16 ஆகஸ்ட், 2021 அன்று வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20 மற்றும் பட்டியல் கட்டுப்பாடுகள், கட்டுப்பாடு 44–ன்படி இதன் மூலம் அறிவிப்பதாவது:–

1. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 31 மார்ச் 2021ல் முடிந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கை ஆகியவை அனைத்து உறுப்பினர்களுக்கும் தனித்தனியே பரிந்துரைக்கப்பட்ட முறையிலும், கம்பெனி/வைப்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையிலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை அ